Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6
சிலோனில் ,, ரூ. 0-2-0

மாலை 17 } ஈரோடு, 24-6-1944 ஆனி-மீ 11உ { மலர் 37

அறிக்கை 9

திராவிடமே கேள்!

மாணவர் பிரசாரத்தின் வெற்றி

தமிழ் நாட்டில் துவக்கிய மாணவர் பிரசாரத் திட்டம் செவ்வனே துவக்கப்பட்டு வெற்றியுடன் நடந்து வருகிறது என்பதும் அதற்குப் பொது மக்கள் ஆதரவு எதிர்பார்த்ததற்கு மேல் இருந்தது என்பது தென்னாற்காடு ஜில்லா நண்பர் திருப்பாபுலியூர் தோழர் பீட்டர் அவர்களது கடிதத்தால் (குடி அரசில் 4 வாரங்களுக்குமுன் பிரசுரிக்கப்பட்டது) தெரிந்திருக்கலாம். மாணவர் பிரசாரம் வெற்றிகரமாய் எழுச்சியுடன் முடிவு பெற்றது என்பதற்கு அறிகுறியாக திருநெல்வேலி ஜில்லா சுற்றுப்பிரசாரம் செய்து முடித்த மாணவர் குழாம் எழுதியிருக்கும் ஒரு கடிதத்தை உதாரணம் காட்டுகிறோம்.

நாங்கள் கண்ட உண்மை

[தங்கல்] கோவில்பட்டி,
15-6-44.

திராவிட நற்பெருந்தகை

பெரியார் அவர்கட்கு,

வணக்கம் கணக்கில. தாங்கள் திட்டம் வகுத்துத் தந்த வண்ணம் யாங்கள் நெல்லை மாவட்ட நிகழ்ச்சிகளை நலனே முடித்து இன்று கோவில்பட்டியில் தங்கியுள்ளோம். கோவில்பட்டி திராவிடர் கழகத் திறப்பு விழாப் பணியும் எங்கட்கு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகந்தந்த

தகைமைசால் தலைவ!

பாலைவனத்திலே பனிக்கு மண்டபமென நடரிடும் அரிய நாடு தன் அன்றைய நிலையினைக் கண்டு அல்லும் பகலும் அயராருந் தொண்டின் பயனைத் தன் வாணாளிலேயே கண்டுகளித்துச் சென்றாரில்லை. தன்னலத் தரகரைத் தரணியில் சாய்ப்பதே மின்பதை வாழ்வின் மேற்கோளென்றும், கடவுளும் மதமும் கற்பனையென்றும் இடையீடின்றி எடுத்துக்காட்டிய யவன ஆசிரியர் சாக்ரடீசுகூட தனது அறிவுத் தொண்டின் அமைவுறுசிறப்பை அடைந்தாரில்லை அற்றைப்பொழுதினில். ஆனால், திராவிடத்தின் இழிநிலையினையும், திராவிட சமுதாயத்தின் தாழ்நிலையையும் கண்டு 'என் இனத்தவரின் இழி நிலை தடைக்க என் வாழ்நாளை இனிதே அளித்தேன்' என்ற சீரிய கடைப் பிடியினைக் கொண்டு கடந்த 30 ஆண்டுகளாகச் செய்த தங்களின் அருப்பெரும் தொண்டின் முழுப் பயனை இன்று திராவிடம் பெற்றுத் திருந்தி வருகிறது. பொதுவாகத் திராவிடத்தில், சிறப்பாகத் தமிழகத்தில், குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் இன்று சீர்திருத்தம் சிரித்து விளையாடுகிறது. இது சென்ற 2 திங்களாக நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்துவரும் திராவிட மாணவத் தோழர்கள் கண்ட உண்மையாகும்.

இன்று திராவிட மாணவர்கள் மேடைமீதேறி இறுமார்ந்து பேசுகிறார்களென்றால், இன்று திராவிட மாணவருக்கு நாடெங்கணும் நல்வரவேற்பு கிடைக்கிறதென்றால், பள்ளி மாணவரைக் கண்டு பட்டதாரிகளும், பதவியாளரும், புராணப் புல்லறிவாளர்களும் அடங்கி ஒடுங்கி நடுங்குகிறார் [illegible] தாங்கள் தந்த தன்னுணர்வு தனி பொளி மாணவர்கள் பாலுளதாலன்றோ!

பகுத்தறிவியக்கம் பாரினில் கண்ட பண்புடைப் பெரியோய்!

நெல்லை மாவட்டத்தில் எங்கட்கு அரிய வரவேற்பு, அன்பு கனிந்த உபசரிப்பு, பெரும் ஆதரவு இரவு ஒரு மணி வரை கூட்டம், அமைதியாக நடக்க எங்கும் ஏற்பாடு. பொதுவாக ஓர் ஊரில் கூட்டத்தை முடித்துக்கொண்டு அடுத்த ஊருக்குச் செல்லும் பொழுது அவ்வூர் அன்புகெழுமிய அறிவியக்கத் தோழர்களை அத்துணைக் குறுகிய கால அளவில் பிரியநேரிடுகிறதேயென்ற மனக் கசப்புடனேயே பிரிந்து சென்றோம். இதுபோழ்து, கீழ் நாரல் தோழர் வெள்ளைச்சாமி அவர்களைப் பற்றிக் குறிப்பிடாமலிருந்தால், நாங்கள் எங்கள் கடமையை மறந்தவராவோம். அன்பே வடிவாய், அறிவே உயிர்ப்பாய் மிளிறும் அவருக்கும் அவரது துணைவியாருக்கும் திருந்திய திராவிடம் என்றென்றும் கடமைபட்டுள்ளது.

இறுதியாக எங்களது சுற்றுப் பயணம் ஒருவாறு இன்றோடு இனிது முடிகின்றது. திராவிடனைத் திராவிடனாகச் செய்த தன் மதிப்பியக்கத் தனிப் பெருந் தலைவ! வணக்கம்.

இங்ஙனம்,

பூ. கணேசன், தில்லை.
இரெ. தண்டபாணி, செ. நவமணி.

எமது நன்றி

மே 2ஆம் தேதிக்கும் ஜூன் 6ஆம் தேதிக்கும் இடையே மதுரை—இராமநாதபுரம் மாவட்டங்களில் மாணவர் பிரசாரம் நடைபெற்றது. நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் நல்ல உணர்ச்சி காணப்பட்டது. மக்கள் பேச்சை ஆர்வத்துடன் கேட்டனர். கேள்விகட்கு [illegible]

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாணவர்கள் சுற்றுப் பிரயாணம்

ராமனாதபுரம் மாவட்டம்:

திருப்பத்தூர்: 5-6-44 தென்மாப்பட்டு சமதர்மச் செந்தமிழ் கலாசாலையில் தோழர் மகாலிங்கம் அவர்கள் தலைமையில் தோழர்கள் ராமானுஜம், அ. பொன்னம்பலனார், இரா. நெடுஞ்செழியன் முதலியவர்கள் திராவிட இனம் பிரியவேண்டிய அவசியம் புராணங்கள் ஏன் ஒழிக்கப்படவேண்டும் எனும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

சிறுகுடி: 6-6-44-ல் மந்தைப் பொட்டலில் டாக்டர் தலைமையில் மாலை 6 மணிக்கு சிறப்பாய் நடைபெற்றது. மாணவர், மாணவிகள் கும்மி, கோலாட்டம், யுத்த ஆதரிப்புப் பாடல்களுக்குப் பின்னர், தோழர்கள் அ. பொன்னம்பலம், ஆர். நெடுஞ்செழியன், ஆர். ராமானுஜம், திராவிடநாட்டுப் பிரிவினை, சுயமரியாதைக் கொள்கைகளைப் பற்றி விரிவாய்ப் பேசி, தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.

சிங்கம்புணரி: சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் வடபுரமுள்ள ஊரணிக்கரையில் 7-6-44-ஆம் தேதி தோழர் சினிராவுத்தர் அவர்கள் தலைமையில் தோழர்கள் பொன்னம்பலனார், அன்பழகன், நெடுஞ்செழியன், ராமானுஜம் முதலியவர்கள் பார்ப்பனியக் கொடுமைகளால் நமது நாடு கேடுற்று இருப்பது பற்றி மிக்க விளக்கமாக உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினார்கள். தோழர் பொன்னம்பலனாரவர்களால் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

தளவாய்புரம்: (இராஜபாளையம்) 9-6-44-ல் தெ. இ. ந. சங்க சார்பில் இரவு 8-30 மணிக்கு தோழர் நா. சங்கரலிங்கம் அவர்கள் தலைமையில், பால்சாமி தேம்பாடிய பின்னர் தோழர்கள் ஆர். பி. ஆதிநாராயணம், அ. பொன்னம்மலம், ஆர். நெடுஞ்செழியன், கே. அன்பழகன் முதலிய நண்பர்கள் சொற்பொழிவு செய்தனர். தோழர் ஆதிநாராயணன் நன்றி கூறிய பின் கூட்டம் இனிது முடிந்தது.

மழசாபுரம்: திராவிட இளைஞர் சங்கத்தாரால் 10-6-44-ல் நாடார் ஸ்கூல் தலைமை ஆசிரியர் தோழர் எஸ். கே. ராமசாமி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்), க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) ஆகியவர்கள் திராவிட நாடு தனியாட்சி பெறும் முறையைப் பொது ஜனங்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். தோழர் அ. பொன்னம்பலனார் சமுதாய ஊழல்களை விளக்கிப் பேசினார். தோழர்கள் செல்வநாயகம், ஆதிநாராயணன் ஆகியவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தோழர் முத்துசாமி நன்றி கூறினார்.

நெல்லை மாவட்டம்:

பாளையங்கோட்டை 7-6-44-ஆம் தேதி கர்ஸான் பொட்டலில் தோழர் ஈ. வி. முத்தய்யா அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இ. ரெ. தண்டபாணி, செ. தவமணிராசன் முதலியவர்கள் 'திராவிடர் கடமை' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள். சில மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கு இ. ரெ. தண்டபாணியவர்களால் ஆணித்தரமான பதில் கூறப்பட்டு இரவு 12 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

திருநெல்வேலி 8-6-44-ஆம் தேதி மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளியில் தோழர் ஏ. வி. முத்தய்யா அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இ. ரெ. தண்டபாணி, செ. தவமணிராசன் முதலியவர்கள் கம்பராமாயணம் என்பது பற்றி நீண்ட சொற்பொழிவாற்றினார்கள்.

புதியமுத்தூர் 9-6-44-ஆம் தேதி மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாகச் சென்று எஸ். பி. ஜி. மிஷன் காம்பவுண்டில் தோழர் சி. சு. சுப்பையா தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தவமணிராசன், எம். எஸ். சிவசுவாமி முதலியவர்கள் 'கம்பனின் கயமை' என்பது பற்றிப் பேசினார்கள்.

குழக்தூர் 10-6-44-ல் ... வர் தோழர் மு. ரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் எம். எஸ். சிவசுவாமி, இ. ரெ. தண்டபாணி, செ. தவமணிராசன், பூ. கணேசன் பி. ஏ. (ஆனர்ஸ்) முதலியவர்கள் கம்பராமாயணத்தை ஏன் கொளுத்தவேண்டும் என்பது பற்றி சொற்பொழிவாற்ற இரவு இரண்டு மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

வேம்பார் 11-6-44-ஆம் சான் சேவியர் உயர்நிலைக் கல்லூரி மாணவர் தோழர் கு. கோபாலன் பி. ஏ. அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். சிவசுவாமி, பூ. கணேசன் பி. ஏ. (ஆனர்ஸ்), இ. ரெ. தண்டபாணி முதலியவர்கள் "திராவிடர் கடமை" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

12-6-44 தேதி இரவு சோனபுரத்தில் தலைமையாசிரியர் சாமுவேல் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் இரெ. தண்டபாணி, பூ. கணேசன் பி. ஏ. ஆனர்ஸ், எம். பெத்துராசன் முதலியவர்கள் திராவிடர் கடமை என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

13-6-44 தேதி இரவு கீழ ஈராலில் தோழர் செல்லத்துரை தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரெ. தண்டபாணி, பூ. கணேசன், எம். பெத்துராசன் முதலியவர்கள் புராண ஆபாசம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள். மாணவர்களுக்கு வேல். வெள்ளைச்சாமி அவர்கள் விருந்து நடத்தி உபசரித்தார்கள்.

15-6-44ல் கோவில்பட்டியில் தூத்துக்குடி தோழர் எம். எஸ். சிவசுவாமி தலைமையில் தோழர்கள் பூ. கணேசன் பி. ஏ. ஆனர்ஸ், பி. ஜனார்த்தனன் பி. ஏ., இரெ. தண்டபாணி, செ. தவமணிராசன், கே. ஏ. மதியழகன் முதலிய மாணவ தோழர்கள் நாட்டுப் பிரிவினை என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள். நகராண்மைக் கழகத் தலைவர் ஈ. வி. ஏ. வள்ளிமுத்து வந்தனோபசாரம் கூற இரவு 12 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

12-6-44 ஆம் தேதி தூத்துக்குடியில் இரவு 4 மணிக்கு எம். எம். சிவசுவாமி தலைமையில் வடக்கூர் ஜஸ்டிஸ் வாலிபர் சங்கத்தின் முன்பு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் செ. தவமணிராசன், கே. ஏ. மதியழகன், பி. ஜனார்த்தனன் முதலியவர்கள் போலி பொதுவுடைமை என்பதுபற்றிப் பேசினார்கள். இரவு நடுநிசியாக இருந்தும் 1000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வந்திருந்தார்கள்.

ஆணித்தரமான பதிலளித்து வந்தோம்.

அத்தனை ஊர் தோழர்களும் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தனர்.

தோழர்களான ஊ. மு. அ. சௌந்திரபாண்டியன், இராவ்பகதூர் வி. வி. இராமசாமி ஆகியவர்களின் அன்பான மேற்பார்வையில் பிரசாரம் நடைபெற்றது.

மதுரை தோழர் எ. வேணுகோபால் அவர்கள் பிரசாரப்பொறுப் பேற்று பெரிதும் உழைத்தார். ஆங்காங்குள்ள மாணவத் தோழர்கள் எங்களுக்கு உதவி செய்தனர்.

தோழர்கள் அ. பொன்னம்பலனார், இரா. நெடுஞ்செழியன் ஆகியவர்கள் இராமநாதபுரம் மாவட்ட முழுவதிலும் மதுரையில் சில ஊர்களிலும் கலந்து கொண்டனர். அத்தனைத் தோழர்கட்கும் எங்கள் நன்றியறிதலான வணக்கம்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

திருச்சியில் பெரியார் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

திருச்சி சலவைத் தொழிலாளர் தோழர் முத்து அவர்கள் மகன் தோழர் இரத்தினம் திருமணத்தில் பெரியார் தலைமை வகித்தபோது பெரியாரைத் தலைவராகப் பிரேரேபித்த சலவைத் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த தோழர் வெங்கலவன் பி. ஏ. அவர்கள் பெரியாரை புகழ்ந்து பேசியதோடு தான் பி. ஏ. பாஸ் செய்து வெகு காலம் ஆகியும் தங்கள் குலத்தில் தாம் ஒருவரே பி. ஏ., ஆக இருந்தும் தனக்கு சர்க்காரும், எந்தக் கட்சியும் எவ்வித தனி சௌகரியமும் செய்யவில்லை என்று பொருள்படும்படி பேசி வருத்தப்பட்டுக் கொண்டதற்கும் மற்றும் பெரியாரைப் புகழ்ந்து சிலர் கூறினதற்கும் பெரியார் பதிலாகப் பேசியதாவது:-

"தோழர்களே! தோழர் வெங்கலவன் அவர்கள் என்னை பாராட்டிப் புகழ்ந்து பேசினார். அவருக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பது உண்மை தான். நான் செய்து வரும் தொண்டு பெரிதும் பொது மக்களையும், சிறப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களையும் பொறுத்து பொதுவில் ஆற்றிவருகிறேனே ஒழிய, தனிப்பட்ட மனிதர்கள் விஷயத்தில் நான் அதிகம்செய்ய முயற்சிப்பதில்லை என்பதோடு, அது என்னால் முடியக்கூடிய காரியமும் அல்ல; முடிவதானாலும் தனிப்பட்ட மனிதர்கள் பற்றி எவ்வளவுக் கெவ்வளவு கவலை எடுத்துக் கொள்ளுகிறேனோ அவ்வளவுக்கவ்வளவு எனது சிறிது செல்வாக்குக்கும் பலக் குறைவு ஏற்பட ஏதுவாகிறது.

அப்படி இருந்தும் நான் தவறாமல் தினம் ஒன்றுக்கு 4, 5, சிலசமயங்களில் 10வீதம் கூட சிபார்சு கடிதங்கள் கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். சில சமயங்களில் நான் வெளியூர் போகும் நிகழ்ச்சியைக்கூட பத்திரிகையில் தெரிவிப்பதில்லை. காரணம் என்னவென்றால் நான் போகும் ஊர்களுக்குக்கெல்லாம் 10, 15 பேர்கள் வந்து அதற்கு சிபார்சு இதற்கு சிபார்சு என்று என்னால் முடியாததற்கெல்லாம் கேட்கிறார்கள். கொடுக்காவிட்டால் அவர்கள் புது விரோதிகள் ஆகிவிடுகிறார்கள். கொடுத்து அது பயன்படாவிட்டால் நான் சரியாய் முயற்சித்திருந்தால் கிடைத்திருக்காதா என்று நிஷ்டூரப்பட்டுக் கொள்ளுகிறார்கள். சில சமயம் ஒருவருக்குக் கொடுத்தது போதாதென்று வேறு நமக்குத் தெரியாத நபருக்குக் கேட்கிறார்கள். கொடுக்காவிட்டால் கொடுத்து ஒரு தடவை கொடுக்க முடியாமல் போனால் வெளிப்படையான எதிரியாகவே ஆகிவிடுகிறார்கள். சிபார்சு கொடுத்து அனுகூலம் ஆகி அவர்கள் தகுந்த யோக்கியதைக்கு வந்தாலும், அதற்கும் மேல், யோக்கியதைக்கு போக நம்மை வைதால் அனுகூலமாகும் என்று கருதினால், தாராளமாய் வைகிறார்கள். தங்களுக்குக் கீழ் இருப்பவர்கள் நமக்கு வேண்டியவர்களாயிருந்தால் தொல்லை கொடுக்கிறார்கள். நமக்கு விரோதமாகவும் சதியாலோசனையில் கலந்து கொள்ளுகிறார்கள். சிபார்சோ, அல்லது வேலையோ நம்மால் கிடைக்காவிட்டால் இந்தக்கட்சி என்ன சாதித்தது என்கிறார்கள். வேலை கிடைத்து நல்ல பதவியில் உட்கார்ந்து கொண்டு மேலால் நம் தயவு தேவை இல்லை என்று கண்டு கொண்டால் "நான் ஒரு கட்சியாலும் ஒருவர் ஆதரவாலும் இப்பதவி பெற்றவன் அல்ல. இந்த கட்சியால் கட்சித் தலைவரால் எனது முற்போக்குக் கெட்டுப்போய் விட்டது. என்னுடைய தனிப்பட்ட கெட்டிக்காரத்தனத்தினால் முன்னுக்கு வந்தேன்" என்றும், "என்ன கட்சி? கட்சிக்கு என்ன செல்வாக்கு? கட்சி எங்கே இருக்கிறது?" என்றெல்லாம் கூடப்பேசுகிறார்கள். இந்த விதமான நிலைமை நம் மக்களிடம் இன்று நேற்றல்லாமல் கட்சி தோன்றிய காலம் முதல் தியாகராயர், பனக்கால் அரசர், பொப்லி அரசர் காலம் முதல் இருந்து வருகிறது.

பனகாலரசர் "ஒரு வேலை காலியானால், அதனால் எனக்கு 20 விரோதியும் ஒரு சந்தேகப்படத்தக்க நண்பனும் ஏற்படுகிறான்" என்று சொல்லி இருக்கிறார்.

கட்சி என்றால் தனிப்பட்டவர்களுக்கு உத்தியோகம், பதவி, பட்டம், பொருள் லாபம் என்பதாகத்தான் பெரும்பாலான மனிதர்கள் நினைத்திருக்கிறார்களே தவிர, பொது உழைப்பு என்றோ, பயன் அடைந்தவர்கள் நன்றி காட்டுவது என்றோ வெகு பேர் கருதுவதே இல்லை. பார்ப்பனர் அப்படி நினைப்பதே இல்லை. கட்சிக்கு ஆகப் பொதுவாகப் பாடுபடுவதும் பலனை வரும்போது அனுபவிப்பதும் என்று கருதுகிறார்கள். நம்மவர்கள் பாடுபடாமல் தனக்கு தனக்குத் தனக்கு என்கின்றார்கள். இந்த லக்ஷணத்தில் நன்றியும் கிடையாது. அதுமாத்திரமல்லாமல் எதிரியுடனும் சேர்ந்து கொள்ளுவது சகஜமாக இருக்கிறது.

உதாரணமாக ஹைக்கோர்ட் ஜட்ஜு, தேவஸ்தானபோர்டு கமிஷனர் முதலிய பதவியை எடுத்துக்கொள்ளுங்கள். பார்ப்பனரல்லாத ஹைகோர்ட் ஜட்ஜுகளும், தேவஸ்தான போர்டு [illegible] [illegible] இந்த வரை அதில் [illegible]

[illegible] தனை பெரும்கட்சி ஆதரவினாலேயே நியமனம் பெற்றார்கள். அப்படி இருந்தும் அவர்களில் பெரும்பாலோர் கட்சிக்கு எதிரிகளானார்கள். எதிரிகளுடன் சேர்ந்தார்கள், கட்சியைப் பற்றிக் கவலையற்றவர்களானார்கள். கட்சி மக்களுக்கும், கட்சி கொள்கைக்கும் துரோகம் செய்து தங்கள் முற்போக்கை கருதுபவர்களானார்கள்.

இன்னும் இப்படி எத்தனை உதாரணம் வேண்டுமானாலும் சொல்லலாம். ஒருவர் தன் மகனுக்கு ஒரு 'புரமோஷனு'க்கு சிபார்சு கேட்டு, அது ஒரு அளவுக்கு செய்யப்பட்டு, அந்த அளவு அவருக்கு திருப்தி இல்லையானால் உடனே "வேறு தலைவர் ஏற்பட்டால் தான் கட்சியால் மக்களுக்கு நன்மை ஏற்பட முடியும்" என்று சொல்லிவிடுகிறார். இப்படி ஒரு கட்சியை தனிப்பட்டவரின் வெறும் பதவிக்கும் லாபத்துக்கும் மாத்திரம் தான் என்று கருதினால் கட்சி எப்படி முன்னுக்கு வர முடியும், பதவியும் லாபமும் கிடைத்தாலும் கிடைத்ததின் செல்வாக்கை கட்சிக்கோ கட்சி மக்களுக்கோ பயன் படுத்தாவிட்டால் எப்படி முடியும். எல்லோரும் இப்படி என்று நான் சொல்லவரவில்லை. அநேக நல்லவர்களும் யாதொரு நலனும் இல்லாவிட்டாலும் கட்சிக்குத் தன் கைக்காசைச் செலவழித்துக்கொண்டு அநேக அசௌகரியங்களையும், ஏமாற்றங்களையும் பொறுத்துக் கொண்டு பாடுபடுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களால் இன்று கட்சியின் காரியம் பெரிதும் நடந்து வருகிறது. அவர்கள் இந்த சமுதாயம் உள்ளவரையில் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். அதில் சந்தேகமில்லை என்று உறுதியாய்ச்சொல்லுவேன்.

தவிர தோழர் வெங்கலவன் அவர்கள் என்னை சுயநலமில்லாதவன் என்றும், பதவியில் ஆசையில்லாதவன் என்றும், இருந்தால் சில பெரியவர்களைப் போல் பெரிய பதவிக்கு வந்திருக்கக் கூடும் என்றும், இந்த நெருக்கடியில் பெரும் பணம் சம்பாதித்தும் இருக்கக் கூடும் என்றும் நான் பெரிய தியாகம் செய்திருப்பதாகவும் சொல்லிப் புகழ்ந்தார். அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

நான் இந்த தொண்டு வேலை செய்வதைத் தவிர வேறு எந்தப் பதவிக்கும் தகுதி அற்றவன் என்பது எனக்குத் தெரியும். பதவி வந்தாலும் அதை சமர்த்துகொண்டு இருக்க என்னால் முடியாது என்பது உங்களுக்குத் தெரியும்.

அன்றியும் இன்று எனக்கு பணம் இல்லாமலோ, பதவி இல்லாமலோ நான் இருக்கவில்லை. எனக்கு செலவுக்கு வேண்டியதற்கு மேல் என்னிடம் பணம் உண்டு, அதை என்ன செய்வது என் [illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இருக்கிறது. எனக்கு இருக்கவேண்டியதற்கு மேலான பதவியையும் நீங்கள் அளித்திருக்கிறீர்கள்.

நீங்கள் கருதுகிற அளவு செல்வமும், நீங்கள் கருதுகிற பெரிய பதவியும் எனக்கு இருந்தால் எனக்கு இன்றுள்ளமதிப்பு இருக்குமா என்று யோசித்துப்பாருங்கள். நீங்கள் கருதுகிற பணக்காரரைவிட நீங்கள் கருதுகிற பதவியாளர்களைவிட உங்கள் முன் நான் பெருமை உள்ளவனாக இருக்கிறேன். நீங்களும் பெருமையாய்க் கருதுகிறீர்கள் என்றே கருதுகிறேன். எனக்குச் சுயநலமில்லை என்று கருதாதீர்கள். நான் மகா பேராசைக்காரன். என்னுடைய ஆசையும் சுயநலமும் எல்லையற்றது. நான் என் சொந்த சுயநலம் என்பதை திராவிட சமுதாயம் என்று எண்ணியிருக்கிறேன். அச்சமுதாயத்திற்கு வேண்டிய செல்வமும் பதவியும் என்பவற்றில் அளவற்ற ஆசைகொண்டிருக்கிறேன். அந்த சுயநலத்திற்கே உழைக்கிறேன். அதைத்தவிர என் சொந்தம் என்று எண்ணுவதற்கு அவசியமான சாதனம் எனக்கு ஒன்றுமே இல்லை. இருந்தாலும் இதற்கு மேல் என்ன வேண்டியிருக்கிறது?

ஏன் இவ்வளவு தூரம் (தற்பெருமையாய்க் கருதும்படி) சொல்லுகிறேன் என்றால், ஒவ்வொரு மனிதனும் தோழர் வெங்கலவன் அவர்கள் குறிப்பிட்டவர்களான ராஜா சர் போலவோ, சர். இராமசாமி போலவோ, சர். ஷண்முகம் போலவோ வரவேண்டும் என்று கருதுவதைவிட அதாவது பெரிய செல்வவான்களாகவும், பதவியாளர்களாகவும் வரவேண்டுமென்று கருதுவதைவிட, நல்ல தொண்டனாக தாழ்த்தப்பட்ட கொடுமை செய்யப்பட்ட மக்களுக்கு விடுதலை அளிப்பவர்களாக, அவர்களை செல்வவான்களாகவும், பதவியாளர்களாகவும் ஆக்குபவர்களாக இருப்பதினால் பெருமை இல்லாமல் போகாது என்பதை வாலிபர்களுக்கு எடுத்துக் காட்டவேயாகும். முன் சொன்னவர்களால் ஏற்படும் நன்மையைவிட பின் சொன்னவர்களால் ஏற்படும் நன்மை குறைந்து போகாது. ஆதலால் வாலிபர்களுக்கு செல்வத்திலும் பதவியிலுமே கண்ணும் கருத்தும் இருக்கக் கூடாது என்றும் பொது தொண்டுக்கு இறங்கி தொண்டனாகவே ஆக ஆசைப்படவேண்டும் என்றும், நம் சமுதாயத்துக்கு தொண்டாற்ற செல்வமும் பதவியும் கருதாத தொண்டர்கள் அநேகர்கள் வேண்டி இருக்கிறார்கள் என்றும் தெரிவித்துக் [illegible]கிறேன்" என்று பதி

ஈரோடு மருத்துவ சங்கம்

ஈரோடு மருத்துவ சங்க முதலாவது ஆண்டு விழா பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் 20-6-44-ஆம் தேதி நடந்தது. தலைவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. சங்க அறிக்கை வாசிக்கப்பட்டது.

சேலம் தோழர் கோவிந்தன் அவர்களால் பண்டிட் ஆனந்தம் அவர்கள் படம் திறந்துவைத்ததும் தோழர் பி. ஷண்முகவேலாயுதம் சொற்பொழி வாற்றினார்.

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

தீர்மானங்கள்

1. மேளம் வாசிப்பவர்கள் மருத்துவர்களுடை திருமணங்களுக்கு வாசிக்க வருவதை இழிவாய்க் கருதி வாசிக்க மறுப்பதால் அப்படிப்பட்டவர்களுக்கு கரூர், குளித்தலை, திருச்சி, திருவையாறு, கும்பகோணம், சிதம்பரம் முதலிய இடங்களில் நடப்பது போல் மருத்துவர்கள் தங்கள் தொழிலை செய்யக்கூடாது என்றும் தங்கள் சலூன்களுக்கு அவர்களை வர விடக்கூடாது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. சங்க அங்கத்தினர்களில் சங்க விதிகளுக்கும், தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடவாதவர்கள் சமுதாயத்திலிருந்து விலகிக் கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

இத்தீர்மானங்களின் மீது தோழர்கள் அப்பாவு, ரா. ரங்கசாமி, எஸ். எம். கே. பெருமாள், பெ. பெருமாள் முதலியவர்கள் பேசினார்கள்.

பெரியார் முடிவுரை

தலைவர் முடிவுரையில் சங்க அங்கத்தினர்கள் ஒற்றுமையாக கட்டுப்பாடாக இருக்க வேண்டுமென்றும், உங்களை இழிவுபடுத்துபவர்களை நீங்கள் வெறுக்க வேண்டியது தான் சுயமரியாதைக்கு மார்க்கம் என்றும், நீங்கள் யாரையும் சாமி என்றோ எஜமானர் என்றோ கூப்பிடக் கூடாது என்றும், மேளத்தாருக்கு வேலை செய்வதில்லை என்ற கட்டுப்பாடு மாத்திரம் போதாதென்றும், உங்களை அனுமதிக்காத காப்பிக் கடைக்காரருக்கும், உங்களை அனுமதிக்காத கோவில் அதிகாரிகள் முதலியவர்களுக்கும் நீங்கள் வேலை செய்யக் கூடாதென்றும், அந்தத் துணிவு உங்களுக்கு எப்பொழுது வருகிறதோ அப்போது தான் உங்கள் இழிவு நீங்குமென்றும் மற்றபடி நீங்கள் மருத்துவர் என்று பெயர் வைத்துக்கொண்ட[illegible] [illegible] கொண்டாலும், அம்பஷ்ட்ட பிராமண[illegible] என்று பெயர் வைத்துக்கொண்டாலு[illegible] இழிவு நீங்காதென்றும் பேசினா[illegible]

சேலம் மாநாடு

19-6-44 ஆம் நாள் சேலம் விக்[illegible]டன்ரியா சென்ட்ரல் தியேட்டரில், சே[illegible] மாவட்ட திராவிடர் இளை[illegible] மாநாடு சேலம் திராவிட இளை[illegible]களால் கூட்டப்பட்டது. உள்[illegible]ளூர்[illegible] வெளியூர்களிலிருந்தும் ஏராளமான ம[illegible]கள் வந்திருந்தனர். ஆரம்பத்தில் தோ[illegible]ழர்கள் திருவாரூர் சண்முகசுந்[illegible] நாமக்கல் நடராசன், தமிழரசன் மு[illegible]வர்கள் பாடினார்கள். தஞ்சை மாவ[illegible] கௌரவ போர் பிரசாரகர் தோழர் [illegible] ரேசம்மையார் தாராசுக்கொடியை ஏ[illegible] வைத்தார்கள்.

தோழர் இரா. நெடுஞ்செழிய[illegible] அவர்கள் பி. ஏ. (ஆனர்ஸ்) டை மா[illegible]டைத் திறந்து வைத்தார். அதுசம[illegible] திராவிடர் நிலையைக் குறித்தும், தி[illegible] விடநாடு என்று ஏன் கூறுகிறோம் [illegible] பதுபற்றியும், திராவிடநாடு எவ்வா[illegible] சமுதாயத் துறையிலும், பொருளாதா[illegible] துறையிலும், அரசியல் துறையிலும் [illegible]யத்திற்கும், வடநாட்டு மார்வாடி, [illegible] ராத்தி முதலியவர்களுக்கும் அடிமை[illegible] பட்டிருக்கிறதென்பதையும் மிக விள[illegible]மாக ஒன்றரை மணி நேரத்திற்குமே[illegible] எடுத்துக்கூறினார்.

பின், தோழர் ஆர். கண்ணப்ப[illegible] (சேலம் கல்லூரி பிரின்சிபால் தோ[illegible] ஏ. ராமசாமிக் கவுண்டர் அவர்களி[illegible] மகனார்) அவர்கள் தமது வரவேற்பு[illegible]யை நிகழ்த்தினார்.

பிறகு தலைவர் திருப்பூர் எஸ். ஆ[illegible] சுப்பிரமணியம் அவர்கள் தமது தலைமை[illegible]யுரையை வாசித்து முடிந்ததும் பகல் [illegible] மணிக்கு மாநாடு மத்தியான சாப்பா[illegible]டுக்காக ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் திராவிடநாட்டுப் படத்[illegible] தோழர் பி. ஜனார்த்தனம் பி. ஏ. அ[illegible]களால் திறந்து வைக்கப்பட்டது. தி[illegible] விட நாட்டின் அவசியத்தையும் அதை[illegible] திராவிடர் நிலை உயர்வதையும் விளக்கி[illegible] பேசினார். தோழர் இரா. நெடுஞ்செ[illegible]யன் அவர்கள் புராணங்கள் ஏன் [illegible]ளுத்தப்படவேண்டும் என்பதை வி[illegible]கிப் பேசினார். பின், பெரியார் [illegible] வெ. ரா. அவர்களின் வாழ்க்கை[illegible]யும் அவரது சேவையைப் பற்றி[illegible] தோழர் பாவலர் பாலசுந்தர மு[illegible] தோழர் ஈ. வெ. ரா. நாகம்மையாரை[illegible] பற்றி தோழர் எஸ். தனபாக்கிய[illegible] அம்மையாரும், தோழர் மாயவரம் [illegible] நடராஜன் அவர்களைப்பற்றி தோழ[illegible] அ. பொன்னம்பலமும் பேசினார்க[illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

டன் அன்றைய மாநாடு முடிந்தது.

மறுநாள்

9-6-44 ஆந்தேதி காலை 10 மணி தோழர் கே. அன்பழகன் பி. ஏ. னர்ஸ்) அவர்கள் தலைமையில் மாநாடு டும் ஆரம்பமாயிற்று. தலைவர் னுரையாக சுமார் 2 மணி நேரம் ற்பெருக்காற்றினார். தோழர் பி. னிச்சாமி அவர்கள் சேலம் மாவட்ட திராவிடர் கழகத்தைத் திறந்து வைத் ர். டை கழகத்திற்கு நிர்வாகஸ்தர் ரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தோ கள் சி. பி. சின்னராசு, பாவலர் எம். ஸ். பாலசுந்தரம், அ. பொன்னம்பலம் தலானவர்கள் சொற்பொழிவுடன் நாடு இடைவேளை உணவுக்காக ஒத் வைக்கப்பட்டது. பிற்பகல் மாநாட் ல் தமிழரசனுக்கு வெள்ளிக்கிண்ணம் ரிசளிக்கப்பட்டது. பின்னர் பல தீர் ானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுக்கூட்டம்

மாலை 7 மணிக்கு மார்க்கட் மைதா த்தில் சேலம் நகரசபைத் தலைவர் தோழர் பி. ரத்தினசாமி அவர்கள் தலை மையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பி. ஜனார்த்தனம் பி. ஏ., க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) பாவ லர் எம். எஸ். பாலசுந்தரம், அ. பொன் னம்பலம் ஆகியோர் சொற்பொழிவாற்றி னார்கள். மாணவத்தோழர் செங்குட்டு வனால் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது,

திருச்சி சுயமரியாதை மாநாடு

16-7-44 ஞாயிறு காலை 9 மணிக்கு திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் டை மாநாடு நடைபெறும்.

மாநாட்டுத் தலைவர்: பெரியார் ஈ. வெ. ராமசாமி.

கொடியேற்றுபவர்: திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம்.

வரிவுரையாளர்: சி. என். அண்ணா துரை. மற்றும் மாகாணத்தின் எல்லா இடங்களிலுமுள்ள இயக்கத் தோழர் களும், தலைவர்களும் அழைக்கப்பட் டிருக்கிறார்கள். அன்பர்கள் அனை வரும் வருக! என மாநாட்டு வரவேற் புக் கழகத் தலைவர் தோழர் டி. பி. வேதாச்சலம் அழைக்கிறார்.

இரத்தினம்-வேலம்மாள் திருமணம்

18-6-44 ஞாயிறு காலை 9 மணிக்கு திருச்சி முருகன் டாக்கீஸில் தன்மதிப் பியக்கத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சீரிய தலைமையில் தோழர் கள் இரத்தினம்–வேலம்மாள் சீர்திருத் தத் திருமண நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

இரண்டாம் போர் முனை தொடங்கி விட்டது

★

பல மைல்களுக்கப்பால் அது நடைபெறுகிறது

என்றாலும்

சென்னையிலுள்ள நாம்

★

மே. த. கவர்னர் யுத்தநிதிக்குத்

தாராளமாய்ப்

பணம் கொடுத்து அதற்கு உதவலாம்.

ஓப் பேசினார்கள். மணமக்கள் மாலை மாற்றி உறுதிமொழி கூறிக்கொண்டார் கள். பின் மலைக்கோட்டை திராவிட வாலிப கழகத்தார், வரகனேரி, தியாக ராயர் வாசகசாலையார், திருச்சி மருத துவகுல சங்கத்தார், பொன்மலை திரா விட கழகத்தார், திருச்சி திராவிட இளைஞர் கழகத்தார் (Y. M. D. A.) மற்றும் பல நண்பர்கள், உறவினர்கள் மணமக்களுக்கு வாழ்த்துப்பாக்கள் படித்தும், மலர் மாலைகள் அணிவித்தும், பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தனர். வழக்கறிஞர் வேதாசலம், செங்கல்வன் பி. ஏ., (மதுரை), பொன்மலை நாரா யணசாமி, ஏ. கெ. பாஷா முதலி யோர், திருந்திய திருமணத்தைப் பற்றி யும், மணமக்களை வாழ்த்தியும் சொற் பொழிவாற்றினார்கள். தலைவர் பெரி ...யில்விரிவாக 1 மணி

பழக்கங்கள் ஒழிய வேண்டிய அவசியத் தைப் பற்றியும் சொற்பொழிவாற்றிய பின், தாம்பூலம், சந்தனம் வழங்க பகல் விருந்துடன் விழா இனிது 3 மணிக்கு முடிந்தது.

நன்றி அறிவிப்பு

18-6-44 ஞாயிறு திருச்சியில் பெரி யார் அவர்கள் தலைமையில் என் மகன் தோழர் இரத்தினத்திற்கும், நாகர் கோவில் தோழர் வேலம்மாளுக்கும் நடந்த திருமணத்தின்போது, மணமக் களை நேரிலும், கடித மூலம் வாழ்த்தி யும், திருமண நிகழ்ச்சியில் பங்குகொண்டு ஒத்துழைத்தும் சிறப்பித்த தோழர்கள் அனைவருக்கும் என்மனமார்ந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இப்படிக்கு,
பி. முத்துசாமி,

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

1944-ஆம் ஜூன்-மீ 24-உ

இன்றைய அரசியல் வேலை

இன்றைய அரசியலின் காங்கரசாரின் கொள்கையில் பெரிதும் காந்தியார் பற்றிய விளம்பரமே முக்கியமாகப் போய் விட்டது.

ஆகஸ்டு 8 தேதி தீர்மானத்தை சர்க்காரார் வாபீசு வாங்கிக் கொள்ளும்படி காந்தியாருக்குச் சொல்லுகிறார்கள்.

காந்தியார் "வாபீசு வாங்கிக் கொள்ள எனக்கு அதிகாரமில்லை" என்றும் "அத்தீர்மானத்தில் சர்க்காருக்குக் கெடுதியான விஷயம் ஒன்றும் இல்லை" என்றும் சொல்லுகிறார்.

எப்படி இருந்தாலும் ஆகஸ்டு தீர்மானம் வாபீசு வாங்கப்பட்டாலொழிய காந்தியாரிடமும், காங்கரசாரிடமும் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள முடியாது என்று சர்க்கார் முடிவு செய்து விட்டதாகக் காட்டிக் கொள்ளுகிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கரசின் மீது ஒரு பெரிய வெடிகுண்டு விழுந்து விட்டது.

அதாவது காந்தியாரின் மூளையாய் இருந்த டாக்டர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஆகஸ்டு தீர்மானம் வாபீசு வாங்கிக் கொள்ள வேண்டியதுதான் என்பதாகத் தெரிவித்து விட்டார். இந்த வெடி குண்டின் பயனாய் காங்கரஸ் கூட்டம் சற்று அதிர்ந்து விட்டது.

இது தவிர மற்றொரு விவாதம் என்னவென்றால் ஆகஸ்டு தீர்மானத்திற்குப் பின் ஏற்பட்ட பயங்கர அழிவு வேலைகளுக்கும் காங்கரஸ்தான் பொறுப்பாளி என்பது சர்க்கார் முடிவு. அழிவு வேலைகளுக்கு சர்க்கார்தான் பொறுப்பு என்பது காந்தியார் வாதம்.

இவைகளைத் தவிர காந்தியாரிடம் மற்றொரு அதிகாரம் இருந்து வருகிறது. அ[illegible] காந்தியாருக்[illegible] யானது பொதுஜன சட்ட மறுப்பைத் துவக்க அதிகாரமளித்திருக்கிறது. அதை என்ன செய்வது? விட்டுவிடுவதா நடத்துவதா என்கின்ற பிரச்சினை ஒன்று வீம்பில் சிக்குண்டு தவங்கிக் கொண்டு இருக்கிறது.

இந் நிலைமையில் யார் (சர்க்கார், காந்தியார், ஆச்சாரியார் ஆகியவர்களில் யார்) வெற்றிபெறுவார்கள், என்பது ஒரு பிரச்சினையே யாகும். அனேகமாக இந்த விவகாரங்கள் சற்றேறக்குறைய யுத்தம் முடிவு பெறும் வரை நடக்கலாம் என்றும் பிறகு யார் வெற்றிபெற்றார்கள் யார் தோல்வியுற்றார்கள் என்று பொது மக்கள் தெரிந்து கொள்ளுவதற்கில்லாமல் அதாவது அதிகமான காதலால் காதலர்களுக்குள் பிணக்கு (ஊடல்) ஏற்பட்டு இருவரும் புரண்டு முதுகுமுட்ட திரும்பிப்படுத்துக் கொண்டவர்களை "மன்மதன் தனது முயற்சியால்" இன்னார் தான் முதலில் திரும்பினார்கள் என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருவரை யொருவர் திருப்பிக் கொள்ளச் செய்தது போல் முடிந்துவிடும் என்பதில் நமக்கு சிறிதும் சந்தேகம் இல்லை.

ஏனெனில் இருவரின் அரசியல் கொள்கையும் சற்றேறக்குறைய ஒன்றே யாகும். என்னவெனில் சர்க்காருக்கும் எப்படியாவது 40 கோடி பாமர மக்களை அடக்கி யாண்டு சுரண்டவேண்டியது. அது போலவே வடநாட்டு முதலாளிகளுக்கும், தென்னாட்டுப்பார்ப்பனர்களுமான ஆரியர்களுக்கும், அதாவது அவர்களது ஏஜண்டாகவே ஏற்படுத்திக்கொண்ட ஸ்தாபனமாகிய காங்கரசுக்கும் அதுவே கொள்கையாகும். எப்படியெனில் பங்கு விகிதாச்சாரத்துக்கு ஆக பிணங்கிக் கொண்ட கூட்டாளிகள் இந்தப் பிணக்கால் எதிரிகள் விழித்துக் கொள்வார்கள் என்று கண்டால் பிணக்கை ஊடலாக்கிக் கொள்வது இயற்கையே யாகும்.

ஆதலால் இந்தப் பிணக்கை ஆதாரமாக வைத்து நமது பிரச்சினையைப் பற்றி சிந்திப்பது மடமைத் தனத்தில்தான் கொண்டுவிடும் [illegible]

[illegible] வரையும் பற்றி லட்சியம் செய்யாமல் தன் இஷ்டப்படியே தமது அரசியல் காரியங்களைச் செய்து வருகிறார். இருவர்களுக்கும் எதிரியாக காட்டிக் கொண்டு வருகிறார். அதனாலேயே ஜின்னாவினிடம் சர்க்காரும் மதிப்புக் காட்டுவது போல் நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் ஜின்னா அவர்கள் அப்படி அபேட்சையாய் இருக்கக் காரணம் அந்த (முஸ்லீம்) சமுதாயத்திற்கு இருக்கும் சமூக சுயமரியாதை உணர்ச்சியும் அதற்கு ஆக அவர்கள் 100-க்கு 90 பேர்கள் காட்டும் கட்டுப்பாடுமேயாகும். மற்ற தலைவர்கள் அப்படி நடந்துகொள்ள முடியாமைக்குக் காரணம் மற்ற சமுதாயங்களின் சமூக சுயமரியாதை உணர்ச்சி கம்பனைப் போர்த், ஒரு சட்டி கூழுக்கு சமுதாயத்தைக் காட்டிக் கொடுத்துப் பயன்பெறும் தனி உணர்ச்சி சமுதாயத்தில் பெரும் பாலோருக்கு இருப்பதால் முடியாமல் போகின்றது. இதற்குக் காரணம் சமூக சுயமரியாதை இருக்கும்படியான அல்லது ஏற்படும்படியான சாதனம் லக்ஷியக் குறி ஒன்றும் சமுதாயத்திற்கு இல்லாததும், சமுதாய மக்கள் யாவரும் ஒன்று என்றும், இது ஒரு தனி சமுதாயம் என்றும் குறிப்பிட—என்ன அண்டு குறி இல்லாததுமேயாகும். இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் நம் சமுதாயத்திற்கு லட்சியக் குறியும், அண்டு குறியும் ஏற்படலாம் என்கின்ற நம்பிக்கை இருப்பதால் இதை இவ்வளவோடு விட்டுவிட்டு எடுத்துக் கொண்ட விஷயத்திற்குச் செல்லுவோம்.

காங்கரசின் இன்றைய அரசியல் திட்டம் என்னவென்றால், ஆரியர்கள் காந்தியாருக்கு ஏராளமான விளம்பரம் கொடுத்து காந்தியாரை பாமர மக்களுக்குள் இமயமலை அவ்வளவு பெரிய மனிதராகத் தோன்றும்படி செய்து, அதை சர்க்கார் காந்தியார்தான் இந்தியாவின் பிரதிநிதி என்று எண்ணுவதற்கு ஆதாரமாகக் காட்டி தாங்கள் சர்க்காரிடம் இரட்டை பங்கு வாங்கத் திட்டம் [illegible]கிறார்கள். இ[illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வேண்டுமானால் காட்டுவோம். அதாவது ஜஸ்டிஸ் கட்சியார் பொதுக்கூட்டம் போட அனுமதி கேட்டால் காங்கிரசைப்பற்றி ஒன்றும் பேசக்கூடாது என்று நிபந்தனை போட்டு அனுமதி தருகிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்குப் பிரதிநிதித்துவமோ உத்தியோகமோ கொடுப்பதில் மிக்க அனுகூலமாகவே இருக்கிறார்கள். இவற்றால் எல்லாம் காங்கிரசுக்கு நல்ல விளம்பரமும், செல்வாக்கும் உண்டாகிக் கொண்டேதான் வருகிறது. ஆகவே இந்த விளம்பரத்தால் யுத்தத்திற்குப் பின் "இந்தியருக்கு" அதிகமான சீர்திருத்தம் கொடுத்து இப்போதைய முறைப்படியே தேர்தல் நடந்தால் கண்டிப்பாய் காங்கிரஸ் ஆட்சி தான் அதிக அதிகாரத்துடன் ஏற்படும் என்பதில் யாருக்கும் சந்தேகத்திற்கு இடமிருக்காது.

ஆதலால் நமது கட்சியார்கள் இன்றைய நிலைமையில் எந்த முயற்சியானாலும் தேர்தலில் வெற்றி பெற நினைக்கும் மற்றவைவிட காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டால் அதை எப்படி உடைப்பது என்பதில் கவலைகொண்டு அதற்குத் தயாராகவேண்டியது தான் புத்திசாலித்தனமான வேலையாகும். ஏனெனில் காங்கிரஸின் செல்வாக்கை உணர்ந்த நம் பெரியோர்கள் சிலர் இப்பொழுதிருந்தே காங்கிரசாருக்கு நல்ல பிள்ளையாகப் பலர் துவங்கிவிட்டார்கள். அன்று அவர்கள் எங்கிருப்பார்கள் என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறார்கள். என்றாலும் அவர்கள் மீது நாம் குற்றம் சொல்ல வரவில்லை. பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவும், பதவி பெறவும், பயனடையவும் மக்கள் ஆசைப்படுவதிலோ அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்வது என்பதோ அரசியல் உலகில் எந்த வகையிலும் பெரிய குற்றமாகக் கருதப்படுவதில்லை. பொதுவாழ்வில்பட்ட எல்லோரையுமே துறவிகள் என்று கருதுவது முட்டாள்தனமேயாகும். ஆதலால் நாம் இவற்றால் எல்லாம் மனம் உடைந்துவிடாமல் நம் எதிரிகள்-நம் [illegible] பற்றில் [illegible]

முன்நிப்புடன் இருக்கவேண்டும்.

அதில் நாம் வெற்றி பெற்று விட்டோமேயானால் கண்டிப்பாக அடுத்த சீர்திருத்தமானது தேர்தல்களில் நாம் வெற்றி பெறத்தக்கதாகவே ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. அல்லது பிரதிநிதித்துவத்திற்கு தேர்தல் பிரதானமாகவும் சோதனையாகவும் இல்லாமல் நியமன உரிமையும், உண்மை தகுதியும், (அதாவது தனித்த தேவையான தன்மை— மாற்றம் செய்யக்கூடிய தகுதியும்) பிரதானமாகவும் சோதனையாகவும் ஏற்படும் என்பது திண்ணம். அந்த நிலை ஏற்பட முடியாத தேர்தலைப் பற்றி கவலைப்படுவதை நம் அரசியல் வேலையாய்க் கொள்வதில் பயன் இல்லை என்றே கருதுகிறோம்.

பெரியார் ஈ. வெ. ரா.

ஈரோடு: பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 24-6-44 ஆம் தேதி இரவு பட்டுக்கோட்டைக்குப் புறப்பட்டுச் செல்லுகிறார். 28 ஆம் நாள் காளப்பநாயக்கன்பட்டிக்கும் 29 ஆம் நாள் ராசிபுரத்திற்கும் செல்லுகிறார். 30 ஆம் தேதி ஈரோடு வருவார்.

காளப்பநாயக்கன்பட்டியில் பெரியார் ஈ. வெ. ரா.

காளப்பநாயக்கன்பட்டி வஸ்தாத அப்பாவு நாயுடுகாரு மகனுக்கு பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் 28ந் தேதி திருமணம் நடைபெறும்.

தாழ்த்தப்பட்டோர் மாநாடு

குன்னூர்: நீலகிரி ஜில்லா தாழ்த்தப்பட்டோர் மாநாடு 18-6-44ந் தேதி குன்னூர் ஸ்ரீ கணேஷ் டாக்கீஸில் ராவ் பகதூர் என். சிவராஜ் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., (சென்ட்ரல்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். மாணிக்கம் வரவேற்புரையை வாசித்தார். ஆர். கஞ்சையா மாநாட்டைத் திறந்து வைத்தார். பிலிப் கிருஷ்ணய்யா பேசிய பின் சிவராஜ் அவர்கள், பேசுகையில், இந்து மதத்தில் தாழ்த்தப்பட்டோர் இருந்தால் பயனில்லை என்றும், எதாவது வேறு மதத்தில் சேரலாம் எனவும் குறிப்பிட்டு விட்டு ஷெடியூல் வகுப்பு பெடரேஷனின் நோக்கத்தை விளக்கினார். ராவ் [illegible]

வாசகர்களுக்கு

யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியை யாரும் அறியாமல் இருக்க முடியாது. பல துறைகளிலும் ஏற்பட்டுள்ளது போலவே பத்திரிகைத் துறையிலும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. காகிதம் கிடைப்பது மிக கஷ்டமாயிருக்கிறது. 'குடி அரசு'க்கு ஆரம்பத்தில் இருந்த சப்ளையில் 8-ல் ஒரு பங்கும் குறைத்து விட்டது. அப்படி இருந்தும் இதுவரை எவ்வளவோ நெருக்கடிக்குள் நமது 'குடி அரசை' 16 பக்கங்களுடன் வெளியிட்டு வந்தோம். ஆனால் இப்பொழுது காகிதம் போதுமான அளவுக்குக் கிடைக்காததால் இந்த வாரம் முதல், பத்திரிகை சைசை சிறிது பெரிதாக்கி பக்கங்களில் 4 பக்கங்களைக் குறைத்து 12 பக்கங்களுடனே வெளியிட முடிவு செய்துள்ளோம். இன்னும் சில வாரங்களுக்குள் 8 பக்கங்களிலே தான் 'குடி அரசு' வெளியிட நேரும் என்றும் அஞ்சுகிறோம்.

எனினும் குறைந்த பக்கங்களில் கூடுமான வரை நிறைந்த செய்திகளை வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம். ஆனால் நிருப நேயர்கள் ஒன்றை மட்டும் மனதில் வைக்கவேண்டும். அதாவது, செய்திகளை அனுப்பும்போது பக்கங்களின் எண்ணிக்கையையும், இடத்தின் நெருக்கடியையும் கவனப்படுத்திக் கொள்ள வேண்டும். செய்திகளைச் சுருக்கி முக்கியமானவைகளை மட்டும் அனுப்பிவைக்கக்கோருகிறோம். இடமில்லாத காரணத்தினால் கட்டுரைகளையோ சில செய்திகளையோ வெளியிட முடியாமல் போனால் வாசகர்கள் மன்னிக்க வேண்டுகிறோம்.

தஞ்சை மாநாடு

தஞ்சை மாவட்ட திராவிடர் வாலிபர் மாநாடு ஜூலை மாத முதல் வாரத்தில் தோழர் W. P. A. சௌந்தர பாண்டியன் அவர்கள் தலைமையில் நடத்த தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ராவ்பகதூர் வி. வி. ராமசாமி நாடார், என். ஆர். எஸ். ராமலிங்கம் பி. ஏ., வழக்கறிஞர் டி. பி. வேதாசலம், சி. என். அண்ணாதுரை, பாரதிதாசன், கே. கே. நீலமேகம், வி. சின்னதம்பி மற்றும் பலரும் டை மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனது நன்றி

நான் சென்ற 6ஆம் தேதி சைக்கிளிலிருந்து விழுந்து காயமுற்ற செய்தியை நம் இயக்கத் தோழர்கள் பலர் கடிதம் மூலம் என் உடல்நிலையை விசாரித்த [illegible] எனது அன்பான வணக்கம்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சர்க்கார் விவசாயத் திட்டம்

புதுடில்லி: சுகாதார கல்வி இலாகா அதிகப்படிக் காரியதரிசியும், விசேஷ விவசாய அபிவிருத்திக் கமிட்டித் தலைவருமான சர் பிரோஸி காரிகாட் பத்திரிகா நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டதாவது:-

"அடுத்த 10 வருஷங்களில் 50 சதவிகிதமும், 15 வருஷங்களில் 100 சதவிகிதமும் விவசாய உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சிக் கௌன்சில் விசேஷக் கமிட்டி தயார் செய்த திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய முதற்படி நடவடிக்கைகள் இந்திய சர்க்காரால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது யுத்தத்திற்குப் பிந்தின திட்டமல்ல; அதிக உற்பத்தி இயக்கத்தை ஒட்டிய நடவடிக்கை. பின்னர் யுத்தத்திற்குப் பிந்திய அபிவிருத்தித் திட்டங்களுடன் இதுவும் சேர்க்கப்பட்டுவிடும். 1000 கோடி ரூபாய் மூலதனச் செலவிற்கும் பின்னர் வருடா வருடம் 20 கோடி ரூபாய் செலவு செய்யவும் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் யாவும் சாகுபடி செய்யப்பட்ட பின் ஏக்கருக்குச் சராசரி 9 அணா மொத்தச் செலவேற்படும். பம்பாய் திட்டத்தில் 15 வருடங்களில் 130 சதவிகிதம் விவசாய அபிவிருத்தி செய்ய ரூ. 1245 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

யுத்தத்திற்கு முன் விலையை ஆதாரமாகக்கொண்டே இத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் சரியான சாப்பாடு, வாழ்க்கை, அந்தஸ்து உயர்வு ஏற்படச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கம்.

மாகாண சர்க்கார்களுக்குப் பொருளுதவி செய்யவும் இந்திய சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

இதற்குப் பயிற்சி பெற்ற நிபுணர்கள் மிகவும் அவசியமென்பது விவசாய இலாகா கருத்து. குறிய காலத்தில் விவசாயப் பயிற்சி பெற்ற நிபுணர்கள் தயார் செய்ய மாகாண சர்க்கார்களுக்குத் தீவிரமான திட்டமொன்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. விவசாயக் கல்லூரிகளில் இப்பயிற்சியளிப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

25 லட்சம் டன் நைட்ரோஜன் வருடமொன்றுக்கு எருவிற்காகத் தேவையென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நல்ல விதையை உபயோகிப்பது மூலம் 15 சதவிகிதம் மாசூல் அதிகரிக்குமெனத் திட்டம் கூறுகிறது. இதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் விதைப் [illegible]

விற்பனை செய்வதற்குரிய மார்க்கட்டு சர்க்காரால் ஏற்பாடு செய்யப்படவேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

தரிசு நிலங்களில் பயிர் செய்யவும், பாசன வசதியைச் சரியானபடி உபயோகிக்கவும் இதே சமயத்தில் அவசியமான சர்வே செய்யப்படும்.

ஒவ்வொரு தாலுக்காவிலும் ஜில்லாவிலும் விவசாயசங்கம் நிறுவப்படவேண்டு [illegible]

திராவிட இலவச வாசகசாலை

இராசிபுரம்: தோழர் மு. காவேரி அவர்களால் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் 'பெரியார் மாளிகையில்'யில் 21-6-44-ஆந் தேதி கூட்டப்பட்ட கமிட்டிக் கூட்டத்தில் டை வாசகசாலைக்கு தோழர்கள் எம். கே. வெங்கடபதி செட்டியார் தலைவராகவும், சேலம் ஜில்லா போர்டு மெம்பர் ஜனாப் ஜி. எஸ். மொய்தீன் கான்சாயபு உபதலைவராகவும், புகையிலை மண்டி கே. அங்கமுத்து காரியதரிசியாகவும், எம். காவேரி பொக்கிஷதாரராகவும் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

28-6-44 ஆந்தேதி பெரியார் ஈ. வெ. ரா. அவர்களையும் இன்னும் சில தலைவர்களையும் அழைத்து 'பெரியார் மாளிகை' திறப்புவிழாவும் திராவிட இலவச வாசகசாலைத் திறப்பு விழாவும் ஆற்றுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு $9\frac{1}{2}$ மணிக்கு சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டது.

சென்னை ஆ. தி. இளைஞர் சங்கம்

சென்னை: டை சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற நான்காவது வருட 'புட்பால்' பந்தய விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு (Winners & Runners up) 25-6-44-ஆந் தேதி டை சங்க கட்டிடத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் தோழர் பி. ராமய்ய நாயுடு எம். எ., தலைமையில் பரிசுகள் வழங்கப்படும்.

மறைவு

ஈரோடு: ஜூன் 19-ஆந் தேதி மன்று ஈரோடு போர்டு ஹைஸ்கூலின் அதன் உபாத்தியாயர்களாலும், மாணவர்களாலும் கூட்டப்பட்ட ஓர் கூட்டத்தில் ஜூன் 17-ஆந் தேதி திடீரென்று இறந்த ஆசிரியர் தோழர் சி. கே. மருதாசலம் பி. ஏ, எல். டி., அவர்களின் பெருமையைப் பற்றி அநேகர் பேசியதுடன் அவர் ஞாபகார்த்தமாக ஓர் உருவப்படம் திறப்பதென்றும், ஏழை மாணவன் ஒருவனை போஷிக்க தேவையான ஒரு நிதியைச் சேகரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மருத்துவ வாலிபர் மாநாடு

மதுரை: 17-6-44-ல் மதுரை தென் இந்திய கலவுரிமைச் சங்கக் கட்டிடத்தில் கூட்டப்பட்ட மருத்துவர் கூட்டத்தில் சென்னை மாகாண மருத்துவ வாலிபர் முதலாவது மாநாட்டை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

திருமணம்

சென்னை தோழர் வ. பு. மாணிக்கவாசக நாடார் மகன் மோகனதாசக்கும், விருதுநகர் தோழர் பா. செ. சுப்பையா நாடார் மகள் சிவபாக்கிய அம்மாளுக்கும் விருதுநகர் முத்துப்பண்டாரம் தெரு 56-ஆம் நெம்பர் இல்லத்தில் 11-6-44-ஆம் தேதி காலை 7 மணிக்கு மேல் திருமணம் நடைபெறும்.

சங்கீதக் கச்சேரி

ஈரோடு: தேசியப் போர் முனை மாகாண, இசை அமைப்பாளர் தோழர் கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்களும், கூட்டமும் 22-6-44 ஆந் தேதி மாலை 8 மணிக்கு ஈரோடு தாலுகாபீஸ் மைதானத்தில் டிபுடிகலெக்டர் தோழர் ரத்னம் அவர்கள் தலைமையில் இனிய சங்கீதக் கச்சேரி நடத்தினார்கள். தோழர்கள் பாண்டுரங்கமும், செல்லை சரஸ்வதி அம்மை (ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்) யாரும் தமிழில் புத்தக் கொடுமையையும், கமது கடமையையும் விளக்கி இனிய தமிழிசை விருந்தளித்தார்கள். தோழர் சரஸ்வதி அம்மையாருக்கு சர்க்கார் அனுமதி பெற்று, ராவ்பகதூர் எஸ். வி. வி. நாயுடு, அட்வகேட் தோழர் பி. எம். அண்ணாமலை பி. எ, பி. எல்., உள்ளூர் புத்தக் கமிட்டியார் ஆகியவர்கள் தனித் தனியாக ரூ. 50 அன்பளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

தாராவி தமிழ் நாடு பகுத்தறிவு நிலையம்

பம்பாய் தாராவிலுள்ள டை நிலையத்தின் முதலாவது பிரசாரக் கூட்டம் 9-6-44-ஆந் தேதி தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். சுப்பையா, எஸ். பி. சுந்தரவேல், வி. எஸ். டி. ராஜா முதலியவர்கள் சீர்திருத்தம் என்னும் பொருள் பற்றியும், தோழர் மீன்மிசல் ராஜு தமிழரியக்கம் பற்றியும் பேசினார்கள்.

ஓ ஓ

அத்தாக்குடி தெ. இ. ந. உ. சங்க உபதலைவர் தோழர் வி. ஆறுமுகம் அவர்கள் புதல்வர் முத்தையாவுக்கும்-தங்கம் [illegible]

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தமிழ் நாட்டுச் செய்திகள்

கோவில்பட்டி: ஆதிதிராவிட சமூக சீர்திருத்த சங்கக் கூட்டம் 18-6-44 தேதி தோழர் பொன்னையா அவர்கள் தலைமையில் நடந்தது. அதில் ஆகஸ்டு இறுதி வாரத்தில் தாழ்த்தப்பட்டோர் 17வது ஜில்லா மாநாட்டை கோவில் பட்டியில் நடத்துவதென்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

* *

சின்னசேலம்: மூவேந்தர் முத்தமிழ் கழகம் 18-6-44 ஆம்தேதி தோழர் மா. பீட்டர் பி. ஏ. அவர்கள் தலைமையில் கூடியது. கள்ளக்குறிச்சி தோழர் நடன சபாபதியவர்கள் கழகக் கொடியை ஏற்றினார். பின்னர் தோழர்கள் கோபாலகிருஷ்ணராவ், குப்புசாமி, டி. ஏ. கரீம், முகமது உஸ்மான் ஷரீப், இராமசாமி புலவர் ஆகியவர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள்.

* *

சின்ன சேலம் உயர்தரத் தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியரின் நடத்தையைக் கண்டித்தும், மூவேந்தர் முத்தமிழ் கழகத்தை நடத்துகிறவர்களைப்பற்றி அவர் கொண்டுள்ள மனப்பான்மையையும் டை கழக உறுப்பினர்களை அவர் இழிவுபடுத்தி பேசி வருவதையும் கண்டித்தும் கூட்டத்தில் பேசப்பட்டது. அவரை மாற்றவேண்டுமென்றும் தென்னாற்காடு மாவட்ட நாட்டாண்மைக்கழகத் தலைவர் அவர்களும் உறுப்பினர்களும் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேணுமாயும் கோரப்பட்டது என தோழர் மா. பீட்டர் எழுதுகிறார்.

* *

தூத்துக்குடி: திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தின் இளைச் சங்கம் மேலூராலில் 18-6-44ல் தூத்துக்குடி தோழர் எஸ். அர்தர் ஆபிரகாம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. டை சங்கத்திற்கு நிர்வாகஸ்தர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

பட்டுக்கோட்டை: இவ்வூர் மருத்துவ வாலிபர் சங்க ஆண்டுவிழா 20-6-44 ஆம்தேதி பனங்குளம் தோழர் கே. நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ப. சு. தண்டபாணி செட்டியார், சி. என். விசுவநாதன், நாகை என். பி. காளியப்பன், டாக்டர் நாகலிங்கம், பாவலர் கலியபெருமாள் முதலியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள். 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

கும்பகோணம்: இவ்வூர் மோட்டார் [illegible] ழர் வெங்கட்ராமன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. திருச்சி ரயில்வே தொழிலாளர் சங்கத்தலைவர் தோழர் ஷண்முகம், தோழர் ஸ்ரீதரன், இவ்வூர் ஸ்ரீராம விலாஸ் மோட்டார் சர்வீஸ் நிர்வாகஸ்தர் முதலானவர்கள் பேசினார்கள்.

* *

கூடலூர்: 18-6-44-ஆம் தேதி திராவிட இளைஞர் கழகக் கூட்டம் தோழர் து. பாலகிருட்டின சங்கரய்யா தலைமையில் நடைபெற்றது. மாணவத் தோழர்கள் இ. தியாகராசன், ஆ. திராவிட மணி பி. ஏ., வீரமணி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

ஃ ஃ

புதுக்கோட்டை: 18-6-44ஆம்தேதி இக்பால் வாலிபர் சங்கத்தில் சென்னை மேயர் டாக்டர் சையத் நியாமத்துல்லா சாஹேப் பகதூர் அவர்களுக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

ஃ ஃ

இராசிபுரம்: 20-6-44-ல் இராசை மருத்துவகுல சங்கத்தின் பொதுக் கூட்டம் தோழர் இ. மூழர்கைவேல் தலைமையில் நடைபெற்றது. அமாவாசையன்று பொது விடுமுறை அனுஷ்டிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஃ ஃ

கொழும்பு:- திருநெல்வேலி ஜில்லா காரைக்கிணறு ஆதிதிராவிட வாலிபர் அபிவிருத்தி சங்கத்தின் முதல் ஆண்டு விழா கொழும்பு ஜோசப் லேன் 15 நெ. கட்டிடத்தில் 5-6-44-ல் தோழர் தி. சே. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. சென்ற வருட வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. தோழர்கள் என் கே. செல்லமுத்து, பா. ப. முத்தையா, என். என். அய்யப்பன், என். எஸ். ஆல்வார் ஆகியோர் பேசிய பின், நடப்பு வருடத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டது. தேநீர் விருந்துடன் விழா முடிவுற்றது. 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

17-6-44 ஆம்தேதி 'குடி அரசி'ல் 11-ஆம் பக்கத்தில் 'பிறப்பு' என்ற தலைப்பில் திருச்சி துறையூர் என்றிருப்பதை திருச்சி உறையூர் என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

ஜோலார்பேட்டை திராவிடர் கழகம்

18-6-44-ல் தோழர் எம். இருசன் பி. ஏ., அவர்கள் தலைமையில் திருப்பத்தூர் தோழர் எம். நடேசம் பிள்ளை டை கழகத்தை ஆரம்பித்து வைத்தார். தோழர் வீ. வையாபுரி முதலியாரைத் தலைவராகக் கொண்ட ... ஒரு நிர்வாக [illegible]

தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாடு அறிவிப்பு

அன்புடையீர்!

வரும் 1944 வருடம் ஜூலைமாதம் 15, 16, சனி ஞாயிறு இரு தினங்களிலும், ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளி, சரசுவதி மண்டபத்தில் ஓர் சித்த வைத்திய மாநாடு நடைபெறும்.

தோழர் எஸ். ஜி. சுந்தரம் பிள்ளை அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழக சித்தர் ஞான ஆராய்ச்சியாளர், அம்மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார்கள்.

சித்த வைத்திய சிறப்புகளைப்பற்றி மாநாட்டில் சொற்பொழிவாற்ற விரும்பும் வைத்திய நண்பர்கள் 5-7-44க்குள், தாங்கள் பேசவிரும்பும் பொருளைக் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டில் சித்த வைத்தியத்தை நன்கு பரப்பி, நலம் வளர்க்க ஓர் சித்த வைத்தியக் கல்லூரியும், ஓர் கூட்டுறவு மருந்து செய்சாலையும் அவசியமாதலால், அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

கண்காட்சி: சித்தர் நூல்கள், ஏடுகள், முக்கிய மூலிகைகள், மருந்துச் சரக்குகள், மருந்துகள் முதலியன வைக்கப்படும். இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் செயலாளருக்கு எழுதவும். கண்காட்சிக்குக் கட்டணம் இல்லை.

இங்ஙனம்,

ஈ. வே. கிருஷ்ணசாமி,

வரவேற்புக்கூட்டத்தலைவர், ஈரோடு.

செயலாளர்கள்:

A. S. அலாவுதீன் சாயபு,
ஈ. ஜெ. த. வைத்தியசாலை, ஈரோடு.
Dr. N. சுப்பிரமணியம் L.I.M.
கோயமுத்தூர்.

குறிப்பு:— கடிதப் போக்கு வரத்துகளெல்லாம் ஈரோடு, செயலாளர் விலாசத்திற்கு எழுதவேண்டும்.

கோவில்பட்டியில் திராவிடர் கழகம்

15-6-44-ல் கோவில்பட்டி நகர சபைத் தலைவர் தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் தோழர் பி. ஜனார்த்தனம் பி. ஏ., அவர்கள் டை கழகத்தைத் திறந்து வைத்தார். டை கழகத்திற்கு தோழர்கள் எம். பி. துரைசாமி தலைவராகவும், என். கே. ஏ. பால்ராஜ் உபதலைவராகவும், என். எஸ். அண்ணாமலை காரியதரிசியாகவும், எஸ். டி. சீனியப்பன் உபகாரியதரிசியாகவும், ஏ. ஆர். கே. குருசாமி பொருளாளராகவும், மற்றும் 9 பேர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும், தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை